DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.373/2022**

Deposition of Witness

2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - செல்வம் **PW-5** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | தொழில் | - |
| கிராமம் | - | சமயம் | - |
| தாலுக்கா | - | வயது | - |

**(எதிரி ஆஜர் )**

முதல் விசாரணை:-

நான் தற்போது வெள்ளேரி வங்கி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செயலாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததின்பேரில் வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர் பதிவேடு மற்றும் நகை கடன் நிலுவை பதிவேட்டை கொண்டு வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள மற்ற ஆவணங்கள் தற்போது எங்கள் அலுவலகத்தில் இல்லை. அவை சங்ககிரி DR அலுவலகத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ-12 எங்களது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு தொடர்புடையது ஆகும். அ.சா.ஆ-12ல் குருசாமி என்பவர் வாங்கிய கடன் தற்போது செல் ஆகிவிட்டது. மேற்படி குருசாமி என்பவர் உறுப்பினராக சேர்க்கப்பட்டதிற்கான பதிவேட்டின் உண்மை நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி விண்ணப்ப பதிவேட்டின் நகல் **சா.சா-ஆ-1** ஆகும். அதில் அவருடைய முகவரி மற்றும் அவருடைய

கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி குருசாமி எங்கள் கூட்டுறவு நிறுவனத்தில் நகை கடன் பெற்றுள்ளார். நகைக்கடன் பதிவேட்டின் உண்மை நகல் **சா.சா-ஆ-2** ஆகும். மேற்படி நகைக்கடன் தற்போது நிலுவையில் உள்ளது. பொதுவாக கடன் திரும்ப செலுத்தப்பட்டால் செல் ரசீது எங்கள் சங்கத்தில் இருந்து கொடுக்கப்பட்டு பதிவு செய்யும் வழக்கம் உள்ளது.

**குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.373/2022**

Deposition of Witness

2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - பாலசுப்பிரமணியம் **PW-**6 | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | தொழில் | - |
| கிராமம் | - | சமயம் | - |
| தாலுக்கா | - | வயது | - |

**(எதிரி ஆஜர் )**

<u>முதல் விசாரணை:</u>-

நான் தற்போது வெள்ளேரி வள்ளி அரசு மேல்நிலை பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததின்பேரில் வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் சான்றிட்ட நகல் மற்றம் அசலை கொண்டுவந்துள்ளேன். குருசாமி என்பவர் 1987ம் ஆண்டு 6ம் வகுப்பு எங்களது பள்ளியில் சேர்ந்தார். 1993ம் வருடம் பள்ளி இறுதி ஆண்டை முடித்தவுடன் மாற்று சான்று பெற்றுள்ளார். அவர் பள்ளியில் சேர்ந்தபோது அவரது பெற்றோர் பெயர் பள்ளி பதிவேடுகளில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. அவரது தந்தை பெயர் சின்னத்தம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அம்மா பெயர் மாரியம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவருடைய பிறந்த தேதி 01.04.1977 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது மாற்று சான்றிதழை சி.குருசாமி கையொப்பம் செய்தும் அவரது தாயார் ரேகை வைத்தும் வாங்கியுள்ளார். 1987ம் வருடத்தைய சேர்க்கை

பதிவேட்டில் உண்மை நகல் **சா.சா-ஆ-3** ஆகும். சி.குருசாமி என்பவரது மாற்று சான்றிதழின் உண்மை நகல் **சா.சா-ஆ-4** ஆகும்.

**குறுக்கு விசாரணை இல்லை.**